**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.223/2024 - PW-6**

| | |
|---|---|
| Name | திரு. அருண்குமார் |
| Husband/Father Name | கோபிநாதன் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | கார் மெக்கானிக் |
| Age | 30 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.02.2026.

**(எதிரி 2 ஆஜர். எதிரி 1 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

முதல் விசாரணை :

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 17.06.2024ம் தேதி காலை 6 மணி அளவில் நானும் உதய்குமாரும் அரக்கோணம் குடியிருப்பு (TNHB) அங்கிருந்த போது போலீசார் சண்டை நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைப்படம் வரைந்தார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் உதய்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தார். இது குறித்து போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

எதிரி 1 தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் 17.06.2024 அன்று கார் ஷெட்டில் தான் வேலை செய்து கொண்டிருந்தேன். என்னுடைய பணி நேரம் குறிப்பிட்டு கூற முடியாது வேலையை பொறுத்து மாறுபடும். என்னுடைய முழு விலாசம் சாஸ்திரி நகர். கதவு எண்.12, ஜோதி நகர் போஸ்ட், அரக்கோணம். சாஸ்திரி நகர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஒட்டினார் போல் உள்ள சுற்றுசுவரிலிருந்து ஆரம்பிக்கிறது. நான் செல்லும் போது சாஸ்திரி நகரிலுள்ள EB Transformer அருகே போலீசார் பார்வையிட்டு கொண்டிருந்தார்கள். மாதிரி வரைப்படம் வரைந்ததை நான் பார்க்கவில்லை. வரைந்த பிறகு என்னிடம் கேட்டார்கள். வரைப்படம் வரைந்த போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடம் எந்த இடத்தில் வருவதாக என்னிடம்

கேட்டார்கள். மற்றபடி என்னிடம் சம்பவத்தை பற்றி எதுவும் கேட்கவில்லை.

**<u>எதிரி 2 தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் 17.06.2024 அன்று பெண்கள் மேல்நிலைக்கு பள்ளிக்கு எந்த திசையில் நின்று கொண்டிருந்தேன் என்றால் வடக்கு. நான் செல்லும் போது போலீசார் வடக்கு திசையில் தான் பார்வை மகஜர் தயார் செய்து கொண்டிருந்தார்கள். பார்வை மகஜரிலுள்ள விவரங்களை போலீசார் கைப்பட எழுதிக் கொண்டார்கள். அந்த இடத்தில் சுமார் 5 போலீசார் இருந்தார்கள். அதில் குறிப்பாக எந்த போலீசார் பார்வை மகஜர் தயார் செய்தார் என்று எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது. வெற்று தாளில் நான் கையொப்பம் இட்டேன் என்றால் இல்லை. நான் சம்பவம் இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.19 19:04:53 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.